முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1514

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.11.2023,** செவ்வாய்கிழமை

1. பரபிரம்ம ஞான சொரூபமே
   பரம ஆனந்த சூட்சும வடிவாக
   வரம் பல பெற்று இந்த கலியுகத்தில்
   வாழுகின்ற வள்ளலே ஞானியே
2. ஞானியே ஆறுமுக அரங்கனே
   ஞாலமதில் உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   கனிவுகொண்டு ஞான அறிவுரை ஆசி
   கண்டுரைப்பேன் சோபகிருது தேள் திங்கள் தன்னில்
   (சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 05 ம் நாள், 21.11.2023, செவ்வாய்கிழமை)
3. தன்னிலே அரங்கனே கலியின் சிறந்த ஞானி
   தவதர்ம பலமிக்க உயர்ந்த ஞானி
   அண்ணலே என உன் திருவடி பற்றி
   அகிலத்தார் அபயமென சரணாகதி கொண்டுவிட்டால்
4. கொண்டதொரு மக்களெல்லாம் குவலயத்தில்
   கூறிடுவேன் கர்மவினை தாக்கம் விலகி
   தொண்டுவழி உன் தூய சீடர்களாக
   தேசமெங்கும் அற்புதத்தை நடத்துகின்ற
5. நடத்துகின்ற ஞான வழி மேல்நிலையை
   ஞானிகளாகும் வண்ணம் தன்னிலை உயர்ந்து
   உயர்ந்து உலகில் உலகமாற்றத்துக்கு
   உன்வழி பெருந்துணை புரிவரப்பா
6. துணைபட உன்னோடு பிறவித்தொடர்புள்ள
   தூய தொண்டர்கள் அத்துனைபேரும்
   இனிவருங்காலம் பிரணவக்குடிலில் முழுமைபட
   இயம்பிடுவேன் தங்கி சரணாகதி மிகுந்து

7. மிகுந்துமே உலகமாற்றமாக மேலான நிகழ்வு அரங்கன் உன் ஞானத்தால்
காலமதில் சடுதி நடந்தேறும் கருணைகொண்டு ஆறுமுகன் உடனிருக்க
உடனிருக்க அற்புதம் உலகில் இனிதே அரங்கேறும்
உரைத்திட்ட ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—